கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

குறள்

நகராட்சி அலுவலகம்
திருவத்திபுரம்.
நாள் 23.05.2025

## மன்ற கூட்ட அறிவிப்பு

திருவத்திபுரம் நகரமன்றத்தின் சாதாரண மன்ற கூட்டம் 30.05.2025 ஆம் நாள் வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு நகரமன்றத்தின் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகரமன்றத் தலைவர்,
திருவத்திபுரம் நகராட்சி

**பொருள் எண் 1**

திருவத்திபுரம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2024-2025ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை செ.உ.,எண் அ6/5400/2024 நாள் 21.01.2025இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 28.02.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட கிரிதரன்பேட்டை நகராட்சி உயர்நிலைப்பள்ளிக்கு மிதிவண்டி நிறுத்தம் அமைத்தல் பணி. | ரூ.5.00 இலட்சம் | PMS Construction | -0.01% குறைவு |
| | | | P.அன்பழகன் ஒப்பந்ததாரர் | 0.83% அதிகம் |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1ல் காணும் பணியினை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள PMS Construction, Cheyyar நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1510/2024/இ1

**பொருள் எண் 2**

திருவத்திபுரம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2024-2025ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை செ.உ.,எண் அ6/5400/2024 நாள் 21.01.2025இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 09.04.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ. எ ண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | திருவத்திபுரம் நகராட்சி காமராஜ் நகர் மார்க்கெட் அருகில் நிழற்கூடம் அமைத்தல் | ரூ.30.00 இலட்சம் | முகில் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரர் | 0.95% அதிகம் |
| | | | P.அன்பழகன் ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1ல் காணும் பணியினை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள P.அன்பழகன் ஒப்பந்ததாரர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1510/2024/இ1

**பொருள் எண் 3**

திருவத்திபுரம் நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-2025ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை செ.உ.,எண் அ6/6000/2024 நாள் 27.01.2025இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 28.02.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ. எ ண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | திருவத்திபுரம் நகராட்சி கோனேரி தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் (வார்டு 11) பணி | ரூ.6.00 இலட்சம் | Mughil Construction | 0.11% அதிகம் |
| | | | P.அன்பழகன் ஒப்பந்ததாரர் | -0.006% குறைவு |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1ல் காணும் பணியினை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள P.அன்பழகன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1276/2024/இ1

பொருள் எண் 4

திருவத்திபுரம் நகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் 2023-2024ன் கீழ் மாவட்ட திட்ட அலுவலர் (ஒருவதி), திருவண்ணாமலை அவர்களின் கடித ந.க.எண் 928/2024/அ1 நாள் 25.10.2024ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 14.03.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம், கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | Construction of New Toilet Building at DSP Street, Dr.Ambedkar Nagar, Govindan Street, Elango Street, Nehru Nagar, New Street, Sannathi Street, and Vaithiyar Street - 8 Nos of ICDS Centres in Thiruvathipuram Municipality | ரூ.2.88 இலட்சம் | அரிகிருஷ்ணன் ஒப்பந்ததாரர் | 0.35% அதிகம் |
| | | | க.பெருமாள் ஒப்பந்ததாரர் | -0.010% குறைவு |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1ல் காணும் பணியினை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள க.பெருமாள், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1606/2024/இ1

பொருள் எண் 5

திருவத்திபுரம் நகராட்சியில் 15th CFC Untied Grant 2023-2024ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 16491/2022/இஏ2 நாள் 27.02.2025ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 21.03.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம், கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Providing Press tiles and weathering Work in municipal office | ரூ.19.30 இலட்சம் | அரிகிருஷ்ணன் ஒப்பந்ததாரர் | 0.53% அதிகம் |
| | | | PMS Construction ஒப்பந்ததாரர் | -0.012% குறைவு |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1ல் காணும் பணியினை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள PMS Construction, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1511/2024/இ1

**பொருள் எண் 6**

திருவத்திபுரம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (நகரம்) 2.0 2024-2025ன் கீழ் 9வது மாநில உயர்மட்ட குழுவின் 20.12.2024ம் தேதிய கூட்ட நடவடிக்கைகளின் ஒப்புதலின் படி, கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 28.02.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரத்தினை ஒப்புநோக்கு செய்து Technical Bid அங்கீகரிக்கப்பட்டு, 17.03.2025 அன்று Price Bid திறக்கப்பட்டதன் விவரம். கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | Construction of 3.00MLD Sewage Treatment Plant (STP) cum 10 KLD of Fecal Sludge Treatment Plant in Thiruvathipuram Municipality | ரூ.710.00 இலட்சம் | M/s. Dhanshith Trading Agencies, Trichy | +5.11% அதிகம் |
| | | | M/s. Abbundu Interiors and Constructions Pvt. Ltd, Chennai | +5.39% அதிகம் |
| 2. | Construction of Interception and Diversion work (I and D) to the STP in Thiruvathipuram Municipality | ரூ.540.00 இலட்சம் | M/s. Dhanshith Trading Agencies, Trichy | +4.97% அதிகம் |
| | | | M/s. Abbundu Interiors and Constructions Pvt. Ltd, Chennai | +6.10% அதிகம் |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1 மற்றும் 2ல் காணும் பணிகளை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. Dhanshith Trading Agencies, Trichy நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட +5.11% அதிகம் மற்றும் +4.97% அதிகம் அளித்துள்ளதால், மேற்படி நிறுவனத்திடம் விலை குறைப்பு கேட்டு 19.03.2025ல் கடிதம் மூலம்

கோரப்பட்டது. இதன் அடிப்படையில் M/s. Dhanshith Trading Agencies, Trichy நிறுவனத்திடம் இருந்து கீழ்க்கண்ட விவரப்படியான பணிகளுக்கு கடிதம் மூலம் விலைவிகிதம் குறைத்து 02.04.2025ல் அளித்துள்ளார்.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | Construction of 3.00MLD Sewage Treatment Plant (STP) cum 10 KLD of Fecal Sludge Treatment Plant in Thiruvathipuram Municipality | ரூ.710.00 இலட்சம் | M/s. Dhanshith Trading Agencies, Trichy | -0.00016% குறைவு |
| | | | M/s. Abbundu Interiors and Constructions Pvt. Ltd, Chennai | +5.39% அதிகம் |
| 2. | Construction of Interception and Diversion work (I and D) to the STP in Thiruvathipuram Municipality | ரூ.540.00 இலட்சம் | M/s. Dhanshith Trading Agencies, Trichy | -0.000319% குறைவு |
| | | | M/s. Abbundu Interiors and Constructions Pvt. Ltd, Chennai | +6.10% அதிகம் |

மேற்படி, M/s. Dhanshith Trading Agencies, Trichy நிறுவனம் வரிசை எண் 1ல் காணும் பணிக்கு மதிப்பீட்டு தொகைக்கு -0.00016% சதவிகிதம் குறைவாகவும் மற்றும் வரிசை எண் 2ல் காணும் பணிக்கு மதிப்பீட்டு தொகைக்கு -0.000319% சதவிகிதம் குறைவாகவும் வழங்கிய ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதம் ஏற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண் 178/2023/இ1**

**பொருள் எண் 7**

திருவத்திபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026ன் கீழ் இறைச்சி கூடம் மற்றும் நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல் பணி மேற்கொள்ள இருப்பதால், மேற்படி பணிகள் மேற்கொள்ளும் இடத்தின் மண் பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது. இதனை தொடர்ந்து, தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரி வேலூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு மண் பரிசோதனை செய்ய கட்டணம் ரூ.56640/-யை " The Principal ,TPGIT, Vellore" என்ற பெயருக்கு வரைவோலை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், மண் பரிசோதனை கட்டணம் ரூ.56640/-யை தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரி வேலூர் அவர்களுக்கு செலுத்தவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதி 2025-2026 ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 421/2025/இ1

**பொருள் எண் 8**

திருவத்திபுரம் நகராட்சியில் இயங்கி வரும் நகரமன்ற தலைவரின் ஈப்பு வாகனம் Scorpio TN 97 W5925 வாகனத்திற்கு பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு கேட்பு பட்டியல் தொகை ரூ.52068.00யை Jain Cars and Auto Sales Pvt Ltd திருவண்ணாமலை நிறுவனத்திடம் இருந்து வரப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகை ரூ.52068.00யை Jain Cars and Auto Sales Pvt Ltd,வேலூர்நிறுவனத்திற்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதி 2025-2026 இன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

ஈப்பு வாகனத்தின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி செலவினம் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1664 /2024/இ1

**பொருள் எண் 9**

திருவத்திபுரம் நகராட்சியின் 2025-2026 ஆம் ஆண்டிற்கு அலுவலகத்தில் உள்ள அனைத்து பிரிவு உபயோகத்திற்கு தேவையான எழுதுபொருட்கள், பதிவேடுகள், வெள்ளைதாள்கள், கணினிக்கு தேவையான டோனர்கள் மற்றும் கணினி சேவை மையத்திற்கு தேவைப்படும் இரசீதுகள்(Bills) ஆகியவை இருப்பில் இல்லாத காரணத்தால் தினசரி பணிகள் மேற்கொள்ள மிகவும் சிரமமாக இருப்பதால் அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களிடம் அவ்வப்போது தேவைப்படும் பொருட்கள் வாங்கவும் அதற்காகும் செலவினத் தொகைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க. எண். 69/2023/பி2

**பொருள் எண் 10**

திருவத்திபுரம் நகராட்சிப் பகுதிகளில் தூய்மை இந்தியா இயக்கம் சார்பில் நடைபெற்ற புகையில்லா போகி விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் SS-2024 Phase - 4 குறித்த கள ஆய்வு பணிகளுக்கும் மற்றும் குப்பைகொட்டாதீர்கள் என்ற விளம்பரம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பொதுசுகாதாரப் பிரிவு மூலம் விழிப்புனர்வு பேனர்கள் தயார் செய்யப்பட்டமைக்கு தோராய செலவினத் தொகை ரூ. 5000/- வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொண்டமை நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் அனுமதிக்கலாம்.

இச்செலவினத் தொகையினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண். 1351/2022/H1

**பொருள் எண் 11**

திருவத்திபரம் நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை தினந்தோறும் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாமையால் மாவட்ட சுகாதார அலுவலர் செய்யார் அவர்களின் ந.க. எண். 2833/அ3/2013, நாள். 13.02.2025 தேதியிட்ட கடிதத்தில் இந்நகராட்சிக்கு டெங்கு நோய் பரப்பும் ஆதாரங்களை வேருடன் அழித்தல் மற்றும் விழிப்புணர்வு பணிக்கு 50 நபர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் பணி அமர்த்திக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்நகர்மன்ற தீர்மான எண். 344, நாள் 26.02.2025ன் படி 01.02.2025 முதல் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்து வரும் ஸ்ரீ சாய் டிரஸ்ட் ஆரணி என்ற நிறுவனத்தாரின் பணிக்காலம் 31.03.2025 உடன் முடிவடைவதாலும் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் பணிக்காலத்தினை மேலும் மூன்று மாதங்களுக்கு 01.04.2025 முதல் 30.06.2025 வரை ஏற்கனவே வழங்கி வரும் ஊதிய விகிதத்தில் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளலாம் அதற்காகும் தோராய செலவினத் தொகை ரூ. 20 லட்சத்தினை வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி டெங்கு கொசு ஒழிப்பு (ம) விழிப்புணர்வு பணியினை மேற்கொண்டு வரும் ஸ்ரீ சாய் டிரஸ்ட் ஆரணி அவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் இப்பணிக்கு ஆகும் தோராய செலவின தொகை ரூ. 20 இலட்சத்தினை வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி:க்கலாம்.

ந.க.எண். 1039/2024/எச்1

**பொருள் எண் 12**

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நுண்ணுயிர் உரமாக்குதல் மையங்களில் செயல்பட்டு வந்த காய்கறி கழிவுகள் அறைக்கும் இயந்திரம் (shredding Machine) பழுது பார்த்தல் மற்றும்

எடை போடும் இயந்திரம் கொள்முதல் செய்து தர விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.விவரம்.

## கொடநகர் நுண்ணுயிர் மையம்

| வ. எண் | விலைப்புள்ளிவழங்கியவர்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | MRR Suppliers, Chennai | ரூ.398840.00 |
| 2. | SB & Co., Chennai | ரூ.418000.00 |
| 3. | SRM Enterprises | ரூ.432000.00 |

## ஆற்றங்கரை நுண்ணுயிர் மையம்

| வ. எண் | விலைப்புள்ளி வழங்கியவர்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | MRR Suppliers, Chennai | ரூ.247800.00 |
| 2. | SB & Co., Chennai | ரூ.262800.00 |
| 3. | SRM Enterprises | ரூ.286800.00 |

மேற்காணும் இரண்டு மையங்களிலும் உள்ள இயந்திரங்களையும் பழுது பார்க்கும் பணிக்கு வர பெற்ற விலைப்புள்ளி இரண்டிலும் வரிசை எண். 1-ல் கணும் குறைந்த விலை புள்ளி கொடுத்துள்ள MRR Suppliers, Chennai அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 1043/2025/எச்1

## பொருள் எண் 13

திருவத்திபுரம் நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர தூய்மை பணியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள் அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் மகப்பேறு ஆயா ஆகியோர்களுக்கு 2025-ம் ஆண்டிற்கான சீருடைகள், காலணிகள், பிரதிபலிப்பு ஜாக்கெட் மற்றும் கையுறைகள் ஆகியவைகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து வழங்கவும் மற்றும் சீருடைகளுக்கான தையற் கூலி வழங்கவும்

ஆகியவற்றுக்கான தோராய செலவினத்தொகை ரூ. 150,000/-த்திற்கு (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அகு:

1. மன்றம் அனுமதிக்காலம்
2. மேற்படி செலவினத் தொகை பொது நிதி மூலம் மேற்கொள்ளொவும் மன்றம் அனுமதிக்காலம்.

(ந.க.எண். 52/2022/எச்1)

## பொருள் எண் 14

திருவத்திபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட செய்யாறு வட்டம் பரிதிபுரம் கிராம புல எண் பாட்டை புறம்போக்கு சர்வே எண் 16 மற்றும் கோனேரிகுளத்து தெருவில் அமைந்துள்ள தெரு புறம்போக்கு சர்வே எண் 53 பாட்டை தெரு புறம்போக்கு சர்வே எண் 57. வார்டு பி, பிளாக் 28, சர்வே எண் 99ல் தெரு புறம்போக்கு பகுதியில் குடியிருந்து வரும் நபர்களுக்கு பட்டா வழங்க தீர்மானம் நிறைவேற்றி தர கோரி செய்யாறு வட்டாட்சியர் அவர்களின் கடித ந.க.எண் 2144/ஆ3/2025 நாள் 16.05.2025 மற்றும் ந.க.எண் 2144/ஆ3/2025 நாள் 23.05.2025 ல் கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி இடம் பரிதிபுரம் கிராம சர்வே வார்டு பி பிளாக் எண் 31 நகரளவு எண் 16 பாட்டை புறம்போக்கு இடத்தில் 6 நபர்களுக்கும், கோனேரி குளத்து தெருவில் அமைந்துள்ள தெரு புறம்போக்கு கிராம சர்வே வார்டு பி பிளாக் எண் 20 நகரளவு எண் 53 தெரு புறம்போக்கு இடத்தில் 1நபருக்கும், வார்டு பி பிளாக் எண் 20 நகரளவு எண் 57 ல் பாட்டை தெரு புறம்போக்கு இடத்தில் 22 நபர்களுக்கும், பரிதிபுரம் வார்டு பி பிளாக் 28 நகரளவு எண் 99ல் 16 நபர்களும் சுமார் 5 வருடங்களுக்கு மேலாக வீடுகட்டி குடியிருந்து வருவதால் ஆட்சேபணையற்ற புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் மனையினை வரன்முறைபடுத்தி இலவச மனை பட்டா வழங்க வரப்பெற்ற அரசாணை எண் 318 வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 30.08.2019 மற்றும் 480 வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 11.09.2020 ன் படி பாட்டை , தெரு சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் 45 நபர்களுக்கு குடியிருப்பு மனை பட்டா வழங்க செய்யாறு வட்டாட்சியர் அலுவலக வருவாய் ஆய்வாளர் அவர்களால் பரிந்துரை செய்துள்ளார்

மேலும், செய்யாறு வட்டாட்சியர் அவர்களின் 23.05.2025ஆம் தேதிய கடிதம் மற்றும் இணைக்கப்பட்டுள்ள பட்டியலின் படி மேற்படி இடம் நகரளவு எண் 16 ல் 6 நபர்களுக்கும் நகரளவு எண் 53 ல் 1நபருக்கும் நகரளவு எண் 57 ல் 22 நபர்களுக்கும், நகரளவு எண் 99ல் 16 நபர்களும் ஆக மொத்தம் 45 நபர்களுக்கு சர்க்கார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வரும் மனையினை வரன்முறைபடுத்தி இலவச பட்டா வழங்க நகராட்சிக்கு தடை ஏதும் இல்லை என மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு

அரசாணை எண் 318 வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 30.08.2019 மற்றும் 480 வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 11.09.2020 ன் குறிப்பிட்டுள்ள நிபந்தனை பின்பற்றி பட்டா வழங்க நகராட்சிக்கு தடை ஏதும் இல்லை என ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண் 693/2025/எப்1

பொருள் எண் 15

திருவத்திபுரம் நகராட்சியின் 2023-2024 ஆம் ஆண்டு கணக்கு தயாரித்து திருவண்ணாமலை உள்ளாட்சி நிதி துறைக்கு சமர்ப்பித்து தணிக்கை நடைபெற்று முடிவுற்றுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டு கணக்கு தயாரித்தமைக்கான செலவினம் ரூ.150000,00 யை RMS Account Consultant நிறுவனத்தின் மூலம் கணக்கு சமர்ப்பித்தமைக்கான பட்டியல் தொகையை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. திருவத்திபுரம் நகராட்சியின் 2023-2024 ஆம் ஆண்டு கணக்கு தயாரித்தமைக்கான செலவினம் ரூ.150000.00யை மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1621/2023/பி1

பொருள் எண் 16

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026 ன் கீழ் திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 5 ,பி, பிளாக் எண் 3 சர்வே எண் 1 மற்றும் 3ல் உள்ள புதுத்தெரு மயானம் பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல் பணி ரூ.159.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 20 வது திட்ட அனுமதி மற்றும் உயர்மட்ட குழுவின் ஒப்புதலின் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டப் பணி தொடர்பான விவரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் /2025/இ1

பொருள் எண் 17

திருவத்திபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2025-2026ன் கீழ் தார் சாலை மற்றும் கால்வாய் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது தொடர்பாக திரு.என்.நடராஜன், ஒப்பந்ததாரரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் திருவத்திபுரம் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண் W.P.No.17919/2025 மற்றும் W.P.No.18209/2025 ல் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கு நடத்திட வழக்கு கட்டணம் தலா ஒரு வழக்கிற்கு ரூ.30000.00 வீதம் இரண்டு வழக்குகளுக்கு வழக்கு கட்டணம் ஆக மொத்தம் ரூ.60000.00 வழங்கக் கோரி திரு.S.ராஜேஷ், அரசு சார்பு வழக்கறிஞரிடம் இருந்து கேட்பு பட்டியல் வரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு கட்டணம் ரூ.60000.00யை நகராட்சியின் வருவாய் நிதி 2025-2026 ன் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 421/2025/இ1

**பொருள் எண் 18**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026 ன் கீழ் திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 அண்ணா நகர் பூங்கா அமைத்தல் பணி ரூ.39.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 19 வது திட்ட அனுமதி மற்றும் உயர்மட்ட குழுவின் ஒப்புதலின் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.. இதனை தொடர்ந்து, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 12.05.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | Green Spaces at Anna Nagar Ward No.1 Block A, Survey No.06 | ரூ. .39.00 இலட்சம் | PMS Construction | -0.01% குறைவு |
| | | | பெருமாள் ஒப்பந்தாரர் | 2.58% அதிகம் |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1ல் காணும் பணியினை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள PMS Construction, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 421/2025/இ1

**பொருள் எண் 19**

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026 ன் கீழ் திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 6 கன்னியம் நகர் பகுதியில் இறைச்சி கூடம் அமைத்தல் பணி ரூ.71.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 19 வது திட்ட அனுமதி மற்றும் உயர்மட்ட குழுவின் ஒப்புதலின் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.. இதனை தொடர்ந்து, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 12.05.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | Construction of Slaughter House at Kanni Nagar near MCC Ward | ரூ.71.00 இலட்சம் | PMS Construction | -0.01% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | No.6, Block No.6 Survey No.10/1 | | பெருமாள் ஒப்பந்தாரர் | 3.67% அதிகம் |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1ல் காணும் பணியினை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள PMS Construction, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண் 421/2025/இ1**

**பொருள் எண் 20**

திருவத்திபுரம் நகராட்சி குடிநீர் பிரிவில் பணிகள் மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால் தலைமை நீரேற்று நிலையத்தினை பராமரிக்கவும், குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல், அடிப்படை சேவை பணிகள் செய்தல் அவசியமாகிறது. இந்த சேவை பணிகளை திறம்பட செய்திட வேண்டிய பணியாட்கள் போதுமானதாக இல்லாத நிலையில் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஆண்கள் சுய உதவி குழு மூலம் பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவில் தினசரி சேவைகள் இயக்கி பராமரித்தல் பணிகளில் 18 பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் ஆணை கடித ந.க.எண்.எப்3/32306/2022 நாள்.21.06.2022ல் தெரிவித்துள்ள மற்றும் பொது பணித்துறை (SOR 2023-2024 மற்றும் 2024-2025) குறிப்பிடப்பட்டுள்ள ஊதிய நிர்ணய அடிப்படையில் குறிஞ்சி சுய உதவி குழு மூலம் 2023 ஆம் ஆண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது மேலும், மேற்கண்ட குறிஞ்சி சுய உதவி குழு மூலம் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.19.00இலட்சத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் 1195/2023/இ1**

**பொருள் எண் 21**

திருவத்திபுரம் நகராட்சியில் கல்வி நிதி 2025-2026ன் கீழ் அங்கன்வாடி மையங்களை மராமத்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் 21.03.2025 கோரப்பட்டது. பணி விவரம் கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | இளங்கோ தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல் | ரூ.5.00 இலட்சம் | PMS Construction | -0.01% குறைவு |
| | | | அரிகிருஷ்ணன் | 5.07% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | டாக்டர் அம்பேத்கார் நகர் அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல் | ரூ.5.00 இலட்சம் | PMS Construction | -0.002% குறைவு |
| | | | அரிகிருஷ்ணன் | 4.70% அதிகம் |
| 3. | சன்னதி தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல் | ரூ.5.00 இலட்சம் | PMS Construction | -0.04% குறைவு |
| | | | அரிகிருஷ்ணன் | 3.75% அதிகம் |
| 4. | திருவள்ளுவர் நகர் அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல் | ரூ.3.00 இலட்சம் | PMS Construction | -0.01% குறைவு |
| | | | அரிகிருஷ்ணன் | 5.85% அதிகம் |
| 5. | கோபால் தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல் | ரூ.5.00 இலட்சம் | PMS Construction | -0.003% குறைவு |
| | | | அரிகிருஷ்ணன் | 6.03% அதிகம் |
| 6. | ஆற்றங்கரைத் தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல் | ரூ.2.00 இலட்சம் | PMS Construction | -0.007% குறைவு |
| | | | அரிகிருஷ்ணன் | 4.07% அதிகம் |
| 7. | கோவிந்தன் தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல் | ரூ.5.00 இலட்சம் | PMS Construction | -0.002% குறைவு |
| | | | அரிகிருஷ்ணன் | 3.21% அதிகம் |

மேற்படி வரிசை எண் 1 முதல் 7 வரையிலான பணியினை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் 7 பணிகளுக்கும் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள PMS Construction, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 421/2025/இ1

பொருள் எண் 22

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சாலைகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடிக்க கோரி பொதுமக்களிடம் இருந்தும், நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் வியாபாரிகள் சங்கம், செய்யார் ஆகியோர்கள் மூலம் தொடர்ந்து புகார்கள் வரப்பெற்ற வண்ணம் உள்ளது. எனவே இந்நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களுக்கு அரசு கால்நடை மருத்துவரின் ஆலோசனை பெற்று வெறிநாய் தடுப்பூசி போடவும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யவும் சுமார் 500 நாய்களுக்கு தோராய செலவீனம் ரூ. 6,00,000/- (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்)-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1. பொதுமக்களின் நலன் கருதி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத் தொகையினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2245/2022/எச்1)

**பொருள் எண் 23**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவிற்கு SBM 2.0 (U) நிதியின் கீழ் (2023-24) ல் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் வாகனம் (வண்டி எண். TN-97 U 7429) இந்த வாகனத்தின் மூலம் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் குடியிருப்புகளில் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள மலக்கழிவு தொட்டி (Septic Tank)ல் இருந்து வாடகை அடிப்படையில் அப்புறப்படுத்தவும் இதற்கான வாடகை லோடு ஒன்றிற்கு ரூ.3000/- வீதம் வசூலிக்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதியளிக்கலாம்
2. கழிவுநீர் வாகனம் மூலம் கழிவுகளை அகற்ற லோடு ஒன்றிற்கு ரூ.3000/- என பொது மக்களிடமிருந்து கட்டணம் பெற மன்றம் அனுமதிக்கலாம்.
3. தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் விளப்பரம் செய்வதற்கு ஆகும் செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 887/2023/H1)

**பொருள் எண் 24**

நகராட்சி இயக்குனர், சென்னை, அவர்களின் க.த.எண். 27152/2021/SBM2, 23.05.2025 தேதிய கடிதத்தில் தமிழ்நாடு நகர்புற சுகாதார ஆதரவுத்திட்டம் (TNUSSP), தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் - 2023ல் மலகசடு கழிவுநீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மை தொடர்பாக திருத்திய துணை விதிகளை ஏற்படுத்தவும் இது தொடர்பாக அரசு கடித எண். 146/MA-3/2025 நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறை (MA-3) நாள். 03.04.2025-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய மனித குடியேற்ற நிறுவனம் (சுகாதார ஆலோசகராக) கழிவு நீர் மேலாண்மைக்கான துணை சட்டங்களை ஏற்படுத்தவும் இதன் மூலம் சுகாதார மற்ற கழிவறைகளை மற்றுவதற்கும் நகர்புர சுகாதாராத்தில் பின் பற்ற வேண்டிய பெறுப்புகள் மற்றும் (OSS) சுகாதாரா அமைப்புகளை முறையாக நிர்வகிதல், பராமரித்தல் கழிவுநீர் அற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் இயக்கம் மற்றும் பாராமரிப்பு செலவுகள் குறித்து தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 1998ன் பிரிவு 199ல் அறிவுறுத்தியுள்ளது.

எனவே இச்சட்ட பிரிவின் படி திருத்தப்பட்ட துணை சட்டங்களை உருவாக்குவதற்கு கீழ்காணும் அட்டவணையின் படி பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | முன்மொழியப்பட்ட துணை சட்டத்தை மன்றத்தில் வைப்பது | 12.06.2025-க்கு முன் |
| 2. | செய்தித்தாளில் பொது அறிவிப்பு செய்வது | 14.06.2025-க்கு முன் |
| 3. | ஆட்சேபணைகள் பெறுதல் | 13.07.2025 |
| 4. | தலைமை பொறியாளர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனரின் இறுதி ஒப்புதல் பெறுவது | 30.07.2025 |
| 5. | மாவட்ட அரசிதழில் வெளியிடுதல் | 05.08.2025 |

எனவே மலகசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை (FSSM) மற்றும் தமிழ்நாடு நகர்புற சுகாதார ஆதரவுத்திட்டம் (TNUSSP) ஆகியவை தொடர்பாக அரசினால் உருவாக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட துணை விதிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேற்படி துணைவிதிகள் குறித்த அறிவிப்பினை தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>அ.கு.</u>

1. திருத்தி அமைக்கப்பட்ட துணைவிதிகளை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்வதற்கு ஆகும் செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 728/2025/எச்1)

**பொருள் எண் 25**

திருவத்திபுரம் நகராட்சியில் குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2025-2026ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 28.05.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | Repair and Maintanence of Distribution Main, Pumping Main Leakage works for Water Supply in | ரூ.5.00 இலட்சம் | காஞ்சனா, ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | Thiruvathipuram Municipality | | கே.அன்பழகன் ஒப்பந்ததாரர் | 3.57% அதிகம் |
| 2. | Repair and Maintanence of Motors, Minipower Pump, Hand pump and Valves for Water Supply in Thiruvathipuram Municipality | ரூ.5.00 இலட்சம் | காஞ்சனா, ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |
| | | | கே.அன்பழகன் ஒப்பந்ததாரர் | 4.32% அதிகம் |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1 மற்றும் 2ல் காணும் பணியினை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள காஞ்சனா, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண் 427/2025/இ1**

**பொருள் எண் 26**

திருவத்திபுரம் நகராட்சியில் கல்வி நிதி 2025-2026ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 28.05.2025ல் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம். கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | Repair and Renovation of Chief Minister Morning Breakfast Common Kitchen shed at Vazhoor Pettai Municipal School. | ரூ.2.00 இலட்சம் | காஞ்சனா, ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |
| | | | கே.அன்பழகன் ஒப்பந்ததாரர் | 3.57% அதிகம் |

மேற்காணும் பட்டியலிடப்பட்ட வரிசை எண் 1 ல் காணும் பணியினை ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள காஞ்சனா, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 427/2025/இ1

**பொருள் எண் 27**

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட டாக்டர் அம்பேத்கார் நகர் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடம் கட்டுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் முடிவுற்ற தருவாயில் 15வது நிதிக்குழு ஆணையம் (சுகாதார மான்யம் 2022-2023) ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மதிப்பீட்டில் பணிகள் செய்து முடிக்கப்பட்டதில், மின் விசிறி, மின் விளக்குகள், குடிநீர் வசதி மற்றும் பேவர் பிளாக் வசதி போன்ற வசதிகள் செய்ய போதுமான நிதி அத்திட்டத்தில் இல்லாத காரணத்தினால், மேற்படி பணிகள் அவசியம் உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் நகராட்சியின் வருவாய் நிதி 2025-2026ன் கீழ் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.8.50இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசியம் கருதி பணியை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 421/2025/இ1

**பொருள் எண் 28**

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட செய்யாறு ஆற்றுப்படுக்கையில் உள்ள குடிநீர் விநியோகம் செய்யும் நீர்உறிஞ்சி கிணற்றில் இருந்து கொடநகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் மின் மோட்டர் மூலம் இறைக்கப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் இறைக்க பயன்படுத்தப்படும் மின்பாதை சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி மின் பாதைகள் அளவுக்கு அதிகமான இடங்களில் பழுது ஏற்பட்டும், அதனால் அவ்வபோது மின் மோட்டார்கள் பழுதாகி கொண்டே வருகிறது. இதனால், நகருக்கு குடிநீர் விநியோகம் அடிக்கடி பொது மக்களுக்கு வழங்க முடியாமல் தடைப்பட்டு வருகிறது என்று மின் பணியாளர்கள் தெரிவித்ததின் அடிப்படையில் நேரடியாக சென்று ஆய்வு செய்யப்பட்டதில் உண்மை என உறுதி செய்யப்பட்டது. இதன் காரணமாக, மேற்படி மின்பாதை மாற்றி புதியதாக மின்பாதை அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதி மின் பாதை ( 50 Sq.mm 3 ½ UG Aluminium Cable wire) அவசியம் புதியதாக மாற்ற வேண்டியுள்ளது. இதனை மாற்றினால், பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் தங்கு தடையின்றி வழங்க இயலும். எனவே, குடிநீர் விநியோகம் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2025-2026 இன் கீழ் மேற்கொள்ளவும், உரிய மேல் நடவடிக்கைகள்தொடரவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் அவசியம் கருதி பணியை நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 421/2025/இ1

**பொருள் எண் 29**

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கண்ணாடி இழை கேபிள்கள் பதித்தல் பணி அர்டெல் நிறுவனத்தின் மூலம் நகரின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் காரணமாக நகராட்சிக்கு சொந்தமான சாலைகள் சேதமடைந்த பகுதிகளில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி சாலைகளை சீரமைக்க உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சாலைகளை சீரமைக்க உத்தேச செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதி 2025-2026 இன் கீழ் மேற்கொள்ளவும், உரிய மேல் நடவடிக்கைகள் தொடரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசியம் கருதி பணியை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 421/2025/இ1

**பொருள் எண் 30**

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டிடம் சார்ந்த பணிகளுக்கு நகர் ஊரமைப்பு துறையின் கட்டிட அனுமதி உத்தரவு பெற வேண்டியுள்ளது. எனவே, மேற்படி நகராட்சி பகுதிகளில் நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டிட பணிகளான புதிய மார்க்கெட் வணிக வளாகம் கட்டடம், புதிய அறிவுசார் மையம் மற்றும் நூலகம் கட்டடம் , அரசு மருத்துவமனை கூடுதல் கட்டடம், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடம், நகராட்சி அலுவலக முன்புற புதிய வணிக வளாக கட்டடம் மற்றும் நவீன எரிவாயு தகனமேடை கட்டடம் ஆகியவை நகர் ஊரமைப்புத் துறையின் மென்பொருளில் பதிவேற்றம் செய்து கட்டிட வரைப்பட ஒப்புதல் பெற அங்கீகரிக்கப்பட்ட பட வரைவாளர் கொண்டு பணி மேற்கொண்டு முடித்து வைக்கவும், மேலும், இனிவரும் காலங்களில் கட்டிட பணிகளுக்கு தேவையான கட்டிட அனுமதி உத்தரவு பெற ஏதுவான பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும், அதற்கான செலவின உத்தேச மதிப்பீடு ரூ.15.00இலட்சத்தில் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் நகராட்சியின் வருவாய் நிதி 2025-2026ன் கீழ் மேற்கொள்ளவும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசியம் கருதி பணியை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கான செலவினங்களுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 421/2025/இ1

**பொருள் எண் 31**

திருவத்திபுரம் நகராட்சியில் கல்வி நிதி 2025-2026ன் கீழ் அங்கன்வாடி மையங்களை மராமத்து பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணி விவரம் கீழ்வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இளங்கோ தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல். | ரூ.5.00 இலட்சம் |
| 2. | டாக்டர் அம்பேத்கார் நகர் அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல். | ரூ.5.00 இலட்சம் |
| 3. | சன்னதி தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல். | ரூ.5.00 இலட்சம் |
| 4. | திருவள்ளுவர் நகர் அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல். | ரூ.3.00 இலட்சம் |
| 5. | கோபால் தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல். | ரூ.5.00 இலட்சம் |
| 6. | ஆற்றங்கரைத் தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல். | ரூ.2.00 இலட்சம் |
| 7, | கோவிந்தன் தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல். | ரூ.5.00 இலட்சம் |
| 8, | D.S.P. தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல் | ரூ.1.00 இலட்சம் |

மேற்படி வரிசை எண் 1 முதல் 7 வரையிலான பணிகளை கல்வி நிதி 2025-2026ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண் 474/2025/இ1**

**பொருள் எண் 32**

திருவத்திபுரம் நகராட்சியில் கல்வி நிதி 2025-2026ன் கீழ் அங்கன்வாடி மையங்களை மராமத்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. பணி விவரம் கீழ்வருமாறு.

| வ. எ | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் | மதிப்பீட்டு சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|

| ண் | | (ரூ.இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| 1. | D.S.P. தெரு அங்கன்வாடி மையம் மராமத்து பணி செய்தல் | ரூ.1.00 இலட்சம் | காஞ்சனா ஒப்பந்ததாரர் | -0.01% குறைவு |
| | | | அரிகிருஷ்ணன் | 4.75% அதிகம் |

மேற்படி வரிசை எண் 1ல் காணும் பணிக்கு ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில் குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.காஞ்சனா, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 424/2025/இ1

நகரமன்ற தலைவர்,

திருவத்திபுரம் நகராட்சி